# விமான நிலையம்–கிளாம்பாக்கம் இடையே மெட்ரோ ரயில்: துணை முதல்வர்



**சென்னை, பிப்.23:** சென்னை விமான நிலையத்திலிருந்து தாம் பரம் வழியாக கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் வரை 15.3 கி.மீ. தொலைவு மெட்ரோ ரயில் நீட்டிப்புக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வரு கிறது என்று நிதியமைச்சரும், துணை முதல்வருமான ஓ.பன்னீர் செல்வம் தெரிவித்தார்.

இதே போன்று தாம்பரம் – வேளச்சேரி இடையே மெட்ரோ ரயில் திட்டத்துக்கான சாத்தியக் கூறு அறிக்கை தயாரிக்கும் பணி களும் நடைபெற்று வருகின்றன என்று தமிழக இடைக்கால நிதி நிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.